THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

July, 1955

OFFICE OF THE REGISTRAR OF
19 AUG 1955
MADRAS

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஜூலை, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :—சங்கை C. P. ஹைனமென், லிஞக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெபப்பள்ளி.
6. இளைஞர் ஏடு.
7. வேத வினாக்களும் விடைகளும்.
8. கி.மு. சங்கப் பொருட்கள்
9. மதிப்புரை, விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, ஜூலை 1955 இலக்கம் 9
வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்.

தல்லாகுளம்,
மதுரை,
ஜூன் 23, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

கடந்த மே மாதத்தில் கனம் தேவராஜ் ஜீ. பால் அவர்களுடைய மரணம் நமது திருச்சபைக்குப் பெரிய நஷ்டம். சென்னையில் இருக்கும்போது இது திடீரென நேர்ந்தது. கிறிஸ்துவின் உண்மையான தொண்டனாக எப்போதும சபை வாழ்வுக்கான சேவையையே செய்தவர். திருச்சபைக்கு மாத்திரமல்ல எனக்கும் அவருடைய மரணம் ஒரு பெரிய நஷ்டம் நம்முடைய ஊழியத்தின் பலதுறைகளில் அவர் விட்டுப்போன இடங்களில் தகுந்த ஆட்களை கடவுள் எழுப்புவாரென நாம் நம்புகிறோம். மரணத்திற்குமுன் கடைசியாக நான் அவரோடு சம்பாஷித்தபோது தமது வேலையின் இறுதியில் குரு அபிஷேகம் பெற்று ஊழியம் செய்ய தனக்கு ஆசை என்பதைத் தெரிவித்தார். கடவுளோ அவரைப் பரம ஊழியத்திற்கு அழைத்துக் கொண்டார். கனம் பால் அம்மாளுக்காகவும் அவர்களுடைய இரண்டு பிள்ளைகளுக்காகவும் சபை அனைத்தும் தங்கள் ஜெபத்தை ஏறெடுப்பதாக.

கடைசியாக கனம் தேவராஜ் பால் செப்டம்பர் ஆவிக்குரிய கமிற்றிகூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார். இக்கூட்டங்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் செப்டம்பர் 28—30 வரை நடக்கும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனம் செல்வரத்தினம் ஐயர் அவர்கள் விசேஷித்த உபந்நியாசகர். இக்கூட்டங்களைக் கடவுள் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள். மற்றவிபரங்கள் பின்னால் அனுப்பப்படும்.

தென் இந்திய திருச்சபையோடு இதர சபைகள் ஐக்கியமாகும் நோக்கமாய் ஆலோசித்து வருகிறார்கள் என்பதை சந்தோஷமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாசல் மிஷனைச் சேர்ந்ததும் மங்களூர் ஹூப்ளி முதலிய இடங்களை மையமாய்க் கொண்டதுமான தென் மராத்தி, கன்னட சபை சங்கங்கள் தென் இந்திய திருச்சபையோடு ஐக்கியப்படவேண்டுமென்று வாக்களித்துள்ளனர். ஆனால் இது இன்னொரு சங்கக் கூட்டத்தில் ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும. தென் ஆசிய மெதடிஸ்ற் எப்பிஸ்கோப்பல் சபையைச் சேர்ந்த சென்னை ஹைதராபாத் மாகாணங்களிலுள்ள பாகங்கள் தென் இந்திய சபையோடு ஐக்கியப்படும் நோக்கமாய் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தும்படி சம்மதித்திருக்கிறது. இவைகள் உற்சாகமான அறிகுறிகள் இவைகளைப்பற்றிய ஆலோசனைக் கூட்டங்களில் கடவுளுடைய ஆசீர்வாதம் தங்கி இருக்கும்படி ஜெபியுங்கள்.

கடந்த இரண்டு மாதங்களாக அத்தியட்சாதீன பற்பல பாகங்களிலும், முக்கியமாய் திண்டுக்கலிலும் நடந்த ஆவிக்குரிய கூட்டங்களைக் கடவுள் ஆசீர்வதித்திருக்கிறார். ஜூலைமாதம் மண்டபசாலை, மல்லன்கிணறு, மூன்றுடைப்பு, சிவகங்கை, மானாமதுரை, பரமகுடி பாஸ்றரேட்டுகளில் கனம் பால் கடம்பவனம் ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்துவார்கள். சபை முழுவதிலும் பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதம் தங்கும்படியாக ஒவ்வொரு பாஸ்றரேட்டும் பிரயாசப்படுவதாக.

கடவுள் உங்களோடிருப்பாராக

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

ஜூலை	6 — 7	சாட்சியாபுரம் தவச உற்சவம்
	8—10	ஒட்டன்சத்திரம், ஞானஸ்நானம், திடப்படுத்தல்
	11	பெங்களூர், அத்தியட்சர்கள் கூட்டம்
	12—13	,, ஸினடு நிர்வாகக் கமிற்றி
	16—17	மண்டபசாலை திடப்படுத்தல்
	23	அமெரிக்கன் கல்லூரி கௌன்ஸில்
	24—25	சிவகாசி திடப்படுத்தல்
	30—31	கரிசல்குளம் திடப்படுத்தல்
ஆகஸ்டு	1—4	விடுமுறை
	6—7	கிழாஞ்சுனை, ராஜசிங்கமங்கலம் திடப்படுத்தல்.

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

ஆகஸ்டு	6	மறுரூபத் திருநாள்
	7	திரி. திரு. பின் ஞாயிறு 10
	14	,, ,, 11
	21	,, ,, 12
	24	பரி. பர்த்தொலொமேயு திருநாள்
	28	திரி. திரு. பின் ஞாயிறு 13

2. குருவபிஷேகம்.

ஜூன்மீ 12ம்வ பெரியகுளத்தில் மகாகனம் அத்தியட்சரவர்களால் கனம் மெக்கி, கனம் பாக்கியநாதன், கனம் ஸ்ரீனிவாசகம் ஆகிய மூவருக்கும் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. அவர்கள் முறையே அமெரிக்கன் கல்லூரி, கோம்பை, மடத்தாகுளம் ஆகிய இடங்களில் திருப்பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நமது ஜெபங்களில் நினைப்போமாக.

3. கள்ளிமந்தயம் செய்திகள்.

மதுரை ராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தில் ஆண்டவர் நிகழ்த்திவந்த பலவித அற்புதங்களைக் கண்ணாரக்கண்டு மகிழ வேண்டுமாயின் வடக்கு லோக்கல் கவுன்சிலைச் சேர்ந்த கள்ளிமந்தயம் பிராந்தியங்களின் இன்றைய நிலையையும் நடைபெற்று வரும் ஊழியங்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். எனவே இவ்விதழில் தற்போது நடைபெற்றுவரும் ஊழியங்கள் சிலவற்றை வாசகர்களின் பிரயோஜனத்திற்கென்றும் அப்பிராந்தியங்களுக்காக ஜெபித்து வருபவர்களுக்கு உபயோகமாகவும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். சில ஆண்டுகளுக்கு முன், பாலை நிலம்போல் காணப்பட்ட கள்ளிமந்தயம், தற்போது ஒரு சோலையாக அழகிய ஒரு ஆலயம், அனாதை விடுதி, சமுதாய நிலையம், ஆடு கோழி பண்ணை, ஆரம்பப்பாடசாலை முதலிய ஸ்தாபனங்களைத் தன்பால்கொண்டு காணப்படுகின்றது.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு கள்ளிமந்தயம் அருகே உள்ள வாடிப்பட்டி என்னும் கிராம மக்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். அன்னவர்களின் உற்சாகத்தைப் பாராட்டாது இருக்க இயலாது மரநிழலிலும், வெட்டாந்தரையிலும் ஆராதனை நடத்தினும் பிறரால் எவ்வகை துன்பத்திற்குள்ளாயினும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் இன்பமாயிருக்கின்றனர். ஒரு வீட்டினுட் சென்று அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் வாடிய முகத்தைக் கண்டு தீர விசாரித்தபின இரண்டு நாட்கள் ஆகாரம இல்லாது இருத்தல் கண்டு மனம் உருகினேம். அவ்வீட்டில் மட்டுமல்ல அக்கிராமத்தில் அநேக

வீடுகளில் இதே நிலைமைதான். ஆகவே அந்நிலையை உயர்த்துவது நம் கடமை என்று உணர்ந்து அவர்களின் சொந்தத் தொழிலாகிய தோல் தொழிலை விருத்திசெய்ய கூட்டுறவு தோல் தொழிற் சங்கம் ஒன்று நிறுவி ஓரளவு பணம் கடனாக கொடுத்து உதவி செய்யப்பட்டது. ஓர் நவீன முறை தோல் தொழிற்சாலையும், கல்வி அறிவு அற்ற மக்களை முன்னேற்ற முதியோர் கல்வி பாடசாலையுமாகிய இரு கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக முதியோர் கல்வி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு முதியோர் கல்வி பள்ளியும் ஆரம்பமாகியுள்ளது வாடிப்பட்டிக்கு அருகான ஓர் கிராமம் செல்லும் வழியிலே ஒரு வயலின் வரப்பருகே ஓர் வேதாகமம் இருக்கக்கண்டு வயலில் வேலைசெய்பவரிடம் இது யாருடையது என்று வினவ ஓர் சிறு பெண் தன்னுடையது என்று கூறி அதை வாசித்து வாசித்து, இன்புறுவதாகவும் பல இன்னல்கள் தன்னைச் சூழ்ந்து இருப்பதால் ஞான முழுக்குப் பெற தான் விரும்பினும் முடியாது ஏங்குவதாகவும், கூறியது கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தோம். அப்பெண்ணின் பெயர் பூமுடி. ஊர் வாடிப்பட்டிதான். எங்கும் மக்கள் ஆண்டவரின் நற்செய்தி கேட்க விரைந்து வருவது நமக்கு மகிழ்ச்சியை ஊட்டும்.

விராலிக்கோட்டை, அரண்மனை வலசு என்னும் இருகிராமங்களில் முதியோர் கல்விசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரண்மனைவலசு என்னும் கிராம மக்கள் தற்போது ஞானஸ்நானம்பெற ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அம்மக்களின் விசுவாச நிலையைச் சோதிக்க "ஏம்பா நீ கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்தா ஏதும் சலுகை கிடைக்குமின்று நினச்சயா அப்படி நினையாதே துன்பம் அனுபவிக்க வேண்டியதும் வரும்" என்று சொன்ன போது எங்கழுத்தை வெட்டிப்போட்டாலும் நான் கிறிஸ்து மார்க்கத்திலேதான் இருப்பன் சாமி என்று ஒருவன் கூறியது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது

இன்னும் இப்பிராந்தியங்களில் நடைபெறும் ஊழியங்களை தொடர்ந்து இவ்வர்த்தமானியில் காணலாம்.

கடந்த ஏப்ரல் மாதம் கள்ளிமந்தயம் சமுதாய நிலையத்தில் சுயேட்சை குருத்துவ ஊழிய மாணவர் பயிற்சி முகாம் நடைபெற்றது ஓர் குறிப்பிடத்தக்க செய்தியாகும். அவ்வமயம் பசுமலை செமினெரி ஆசிரியர்கள் பலரும மற்றும பெரியோர் பலரும் ஆசிரியர்களாக வந்து அரும்பெரும் சத்தியங்களைக் கற்பித்தனர். 5 மாணவர்கள் தங்கள் குடும்பத்துடன் வந்து பயிற்சி பெற்றனர்.

அன்பர்களே இப்பிராந்தியங்களின் இரு தேவைகளை நாங்கள் உங்களுக்கு எடுத்துக்கூறுகிறோம். முதலாவது அறுப்பு மிகுதி வேலையாட்களோ குறைவு என்ற தொனி எங்கும் கேட்கப்படு

கிறது ஊழியர்கள் தேவை அதற்காக இறைவனை வேண்டிக் கொள்ளுகிறோம். இரண்டாவதாக, ஏழை மக்களின் வாழ்க்கை நிலை படிப்படியாக உயரவும், தாங்கள் ஜெபிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம என சுவிசேஷகர் கனம் வேதமாணிக்கம் எழுதுகிறார்.

4. கிறிஸ்தவர்களின் பொருளாதார நிலை உயர்வு.

மே மாதம 16ம்தேதி கிறிஸ்தவ மிசியோன்கள் கைத்தொழில் அபிவிருத்தி சங்க சார்பாக (Industrial Missionary Association) கோடைக்கானல் மிசியோன் ஐக்கிய சங்க சபை மண்டபத்தில் (Kodai Missionary Union Hall) நடந்த கூட்டத்தில் கிறிஸ்தவர்களின் பொருளாதார நிலை உயரவேண்டிய அவசியத்தைப்பற்றி தக்ஷணப் பிரதேசத்தில் (Deccan) கோகிர் Kohir என்னுமிடத்தில் பணியாற்றும் கனம் ஜார்ஜ் கார்டன் ஐயர் (Rev. George Garden) பேசினர். குண்டூர் கிறிஸ்தவ காலேஜ் போராசிரியரான டாக்டர் A. T. Fishman ஐயரவர்கள் தலைமை வகித்தார்.

கனம் கார்டன் ஐயர் பேசியதாவது:—ஏழைக் கிறிஸ்தவ மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் சவதரித்துக்கொள்ள முடியாத ஏழ்மையான நிலையில் உழலுவது பரிதபிக்கத்தக்கது. அவர்கள் நிலைமையை உயர்த்த அவசியமான எநத ஏற்பாடும் நிர்ப்பந்தத்திலிருந்து அவர்களை மீட்க உதவுவதல்லாமல் திருச்சபை ஊழியத்துக்குச் சதா மேல்நாட்டு உதவியையே நாடிநிற்கும் மனப்பான்மை அகன்று சுய ஆதரிப்பில் வளர்ந்தேற வழிகாட்டியாயிருக்கும். அதோடு தற்சமயம கிறிஸ்தவ திருச்சபை சுலபமாக மக்களைத் தன் வசமிழுக்கும் குறுகிய நோக்கங்கொண்டதென்ற அபவாதத்தை நீக்கவும் உதவியாயிருக்குமென்று வற்புறுத்தினர். மேலும் அவர் தொடர்ந்து சொன்னதாவது, இந்தப் பொருளாதார சேவையின் முக்கியத்துவத்தைப்பற்றி பல வகுப்பாரும் உணர்ந்து வருகிற இக்காலததிலும திருச்சபை இவ்வூழியம் சித்திபெற அவசியமான திரவியம் ஒதுக்கிவைத்து சீரிய முறையில் இதைச் செய்யத் தயங்குவது ஒரு பெருங்குறையென்று குறிப்பிட்டார்.

தோல் பதனிடுதல், பலவகைத் தோல் சாமான்கள் செய்தல் நமது நாட்டில் திருச்சபையைச் சேர்ந்த அநேகமாயிரம கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு விசேஷ தொழிலாயிருந்து வருகிறது. நூலில் கைத்தறிகொண்டு நெசவு செய்யும் தொழில் மின்சார சக்தியைக்கொண்டு செய்ய ஏற்பட்ட பிறபாடு நசித்துப் போனது யாவரும் அறிந்த விஷயம. அதே போன்று பெரிய தொழிற்சாலைகளில் நூதன இயந்திர சாதனங்களைக்கொண்டு தோல் சம்பந்தமான வேலைகளைச் செய்ய ஆரம்பித்தவுடன் தோல் வேலையில் சம்பந்தப்பட்டவர்களின் கதி அதோ கதியாயிற்று! ஆனல்

கவர்ன்மெண்டார் கைத்தறி நெசவாளர்களுக்குப் பலவித சலுகை கள் காட்ட ஆரம்பித்துள்ளார். அவர்கள் வேலையைப் புதுப்பிக்க திரவிய சகாயம் (subsidy) செய்கிறார்கள். ஆனால் தோல் வேலை செய்யும் ஏழை மக்களுக்கு அவ்வித சலுகைகள் இனனும் காட்டப் படவில்லை இதோடு நில்லாமல் இவ்வேலையில் ஈடுபட்டிருக்கும் ஒரு சாரார் இந்த வேலை செய்வது இழுக்கு என்று சொல்பவர் களின் பேச்சைக்கேட்டு மனம் கூசி அதைக் கைவிட்டுச் சரியான ஊதியங்கிட்டா கூலிவேலையில் ஈடுபட்டு அவதிப்படுகின்றனர். அவர் கோஹிர் என்னுமிடத்தில் நடத்திவரும் இவ்வேலை (Pilot Project) செவ்வனே நடந்து வருகிறதென்றும் அந்த அனுபவத் தைக்கொண்டு கிராமங்களில் இதை நடத்தி துன்புறும் வறுமையில் உழலும் மக்கள் நல்லூதியம் பெற்று இன்புற வழியுண்டென்றும் உணர்த்தினர். இத்தொண்டுகளில் ஈடுபட்டிருக்கும் மக்கள் களங் கம் நீங்கி சுயமரியாதையுடன் வேலை செய்கிறார்களென்று சொல்லி முடித்தார். (தமிழ் நாட்டில் இவ்வகைத் தொண்டுகள் என்ன நிலை யில் உருவாகின்றனவென்பதை நாளடைவில் நாம பார்ப்போம்)

இதைத் தொடர்ந்து கனம் R. R. கைத்தான் ஐயரவர்கள் இந்தியக் கிறிஸ்தவர்கள் சர்க்காரால் தொடர்ந்தேர்ச்சியாய் அபார செலவில் நடத்திவரும பலதரப்பட்ட சமுதாய அபிவிருத்தி ஊழியங் களில் கலந்து அவ்வேலைகளில் பெருமபங்குகொண்டு சேவைசெய் வது அததியாவசியமென்று அறிவுறுத்தினர். அதைத் தொடர்ந்து கிராம இந்தியா பலமான அஸ்திபாரத்தோடு செல்வநிலையில் உயர்த் தப்படவேண்டுமானுல் பலவகையான கைத்தொழில்கள் அபிவிருத்தி யடைய வேண்டும. போட்டியாலுண்டாகக்கூடிய நஷ்டம் விலக் தப்படவேண்டும். எல்லாக் கைத்தொழில்களையும் இணைக்கும் ஒரு சாத்வீகமுறை அமைதல் வேண்டும். கிராம வாழ்க்கையை மேம் பாடடையச் செய்யவேண்டுமானால் செல்வாக்குள்ள மக்கள் தேச நலனுக்காக பலவித கைத்தொழில்களில் ஈடுபட்டு வேலைசெய்யும் பாமரமக்களோடு சமரசமாய் ஒததுழைத்தல வேண்டுமென்று கேட் டுக்கொண்டார்.

கோடைக்கானலில் நடந்த வருஷாந்திர கைத்தொழில் கண் காக்ஷியில் இந்தியாவிலுள்ள சுமார் 35 மிஷியோன்கள் சம்பந்தப் பட்டன. பலதரப்பட்ட கம்பளி நூல் வேலைப்பாடுகள், பித்தளை சாமான்கள், பொம்மைகள், பூத் தையல்கள் (Embroidery) காகி தம், பென்சில், பேனுவகைகள் வைக்கப்பட்டிருந்தன.

அருள்புரம்
திருப்பூர் மார்க்கம்
கோயம்புத்தூர் ஜில்லா
28—5—1955

தமிழ்நாடு கிறிஸ்தவ கௌன்ஸில்
பொருளாதார கமிட்டியின் பேரால்,
பவுல் மு. கோபால கிருஷ்ணன்
செயலாளன்.

5. சாட்சியாபுரம் தவச உற்சவ பண்டிகை.

இது 65வது முறையாகக் கொண்டாடப்படுகிறது. ஜூலை 5—7வரைகளில் நடைபெறும். ஸ்ரீபால் கடம்பவனம் அவர்களும், கனம் அத்தியட்சரவர்களும் கூட்டங்களில் பேசுவார்கள். படக் காட்சி, பாட்டுப் பந்தயம "பரதேசியின் மோட்ச பிரயாணம்" முதலியன இரவு நேரங்களில் நடைபெறும். இக்கூட்டங்களில் ஆவி யானவர் தங்கி ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

6. ஒட்டன்சத்திரம் C.S.I. உயர்தரப்பாடசாலை, எட்டாவது வகுப்பு ஆரம்ப விழா.

1955ம்வருடி ஜுன்மீ 4ம்உ மாலை நடைபெற்றது. சங்கை தேவப்பிரகாசம் ஐயர் தலைமை வகித்தார். இரக்ஷண்யபுரத்தைச் சேர்ந்த கனம் நிக்கல்சன் அம்மையார், பழனி ரேஞ்சு இன்ஸ்பெக் டர், இன்னமும் பல பெரியார் விஜயம் செய்திருந்தனர். பாடசாலை மாணவ மாணவிகள் தங்கள் அபிநய விளையாட்டுகளின் மூலமாய் வந்திருந்தோரை மகிழ்வித்தனர்.

கனம் நிக்கல்சன் அம்மையார், கனம் தலைவர் அவர்கள் கனம் இன்ஸ்பெக்டர் அவர்கள், எட்டாம வகுப்பு மாணவர்கள் சிரத்தை யோடு படித்து, பள்ளிக்கு நல்ல கீர்த்தியைச் சம்பாதிக்கவேண்டும் என்றும மற்ற வகுப்பு மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பு மாணவர் முன்மாதிரி காட்டவேண்டும் எனவும் அவர்கள் நல்லொழுக்கத்தில் தேறினவர்களாகவும் சேவை மனப்பான்மையுடையவர்களாயும் இருக்கவேண்டும் எனக் கூறினர். ஜெபத்துடன் கூட்டம் கலைந்த தென ஸ்ரீ காலின்ஸ் எழுதுகிறார்.

7. இளைஞர் ஊழிய அறிக்கை.

கர்த்தருடைய பெரிதான கிருபையால், நான் முன்னர் அறிவித் திருந்த விடுமுறைகால வேதாகமப்பள்ளி, மதுரை டோக் கல்லூரி யில், மேமாதம முதல் இரண்டு வாரங்களில் நடைபெற்றது.

அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியக் கமிட்டியின் போராதரவில், பங்காரப்பேட்டை திரு P. சாமுவேல் அவர்கள் தன் குழுவினர் உதவிகொண்டு மேற்படி பாடசாலையை நடத்தினர். மதுரை பசு மலையைச் சேர்ந்த சுமார் 40 தலைவர்கள், ஆசிரியர்களாகவும், பிற பொருப்புக்களை ஏற்றுக்கொண்டவர்களாகவும், பணியாற்றினர்.

ஏறக்குறைய 600 மாணவ மாணவிகள் இப்பாடசாலையால், பெரிதும் ஆத்ம பயன் பெற்றனர். பாடசாலை நாட்கள் முழுவதி லும், வெகு உற்சாகத்தோடு, வேதத்தைக் கற்றனர்.

மே மாதம் 15ம் தேதி, மேற்படி பாடசாலே, தலே விழா கொண்டாடி மறை திரு பால்ராஜ் தாமஸ் ஐயரவர்கள், அவ்வைபவத்திற்கு தலேமைதாங்கி, மாணவருக்கும், தலேவர்கட்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கி, உற்சாகப்படுத்தினர்.

மே மாதம் 16ம் தேதியன்று, தலேவர்கட்கென்று விசேஷித்த ஓர் ஒடுக்கக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், கனம் கார்ல் ரைஸ் ஐயரவர்கள் விசேஷித்த உபன்யாசம் செய்தனர். மேலும் அடுத்த ஆண்டிலும் மேற்படி பாடசாலே நடைபெறுவதற்கான பல திட்டங்கள் தீட்டப்பெற்றன என்று இளேஞர் ஊழியர் எழுதுகிருர்

8. வாலிப சங்கங்கள் புதிதாக உருவாக்குவோர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. வாலிபர், வாலிப பெண்கள், சபை வேலேயில் உதவி செய்யவும் சக அங்கத்தினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக பாடுபடவும், சுவிசேஷ ஊழியம் செய்யவும், சக அங்கத்தினரின் சரீர அறிவுக்குரிய வளர்ச்சிக்காக சந்தர்ப்பங்கள் அளிக்கவுமே வாலிப சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன.

2. சங்க அங்கம் ஒருவரின் வயது 16லிருந்து 35க்குட்பட்டே யிருக்கவேண்டும்.

3. உட்சபையில் சேர்ந்திருக்கவேண்டும்.

4. உத்தியோகஸ்தர் 40 வயது வரை அனுமதிக்கப்படலாம்.

5. இந்நிபந்தனேக்குட்படாதவர், கூட்டு அங்கத்தினராக செயலாற்றலாம்.

6. வாலிப சங்கம் எந்த ஊரில் உருவாக்கப்படுகிறதோ, அந்த ஊர் குருவானவரே, அதன் போஷகரும், ஆதரவாளருமாய் இருப்பார்.

7. சங்கம் உருவானபின், ஓர் விசேஷித்த ஆராதனே நடத்தப்பட்டு, சபை நடுவே பூரண அங்கத்தினர், சங்கத்தின் பிரதிக்கினே எடுத்துக்கொள்ளவேண்டும்.

இன்னும் பிற தகவல்களே அறிய விரும்புவோர், எனக்காவது, அல்லது கனம் கிரகரி ஐயர் தல்லாகுளம், மதுரை என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம் என இளேஞர் ஊழியன் கனம் ஜூலியஸ் எழுதுகிருர்.

9. கனம் என். தேவதாஸ் ஐயரவர்கள்.

கர்த்தருடைய பரிசுத்த ஊழியத்தை செய்யும்படி, கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட கனம் N. தேவதாஸ் ஐயரவர்கள், தன் மருமகன், மதுரை, பரி. ஜியார்ஜ் ஆலய குருவான கனம் D. M. சாமுவேல் ஐயரவர்கள் வீட்டில் 14—3—55ல் மறுமைக்குட்பட்டார்கள். கனம் ஐயரவர்கள் எங்கள் சபை குருவாக 1907ல் வந்தார்கள். நல்ல சுகதேகியும், பெலனும், நல்ல பிரசங்கம் செய்யும் குருவாகவும் எல்லாராலும், புகழப்பட்டார்கள்.

ஜெப ஜீவியம். அதிகாலையில் இருட்டோடே எழுந்து, வேதம் வாசித்து, தியானம் செய்து முழங்காலில் வெகுநேரம் நின்று, ஜெபம் செய்து அதற்கு பிறகே, மற்ற வேலையை துவக்குவார்கள். கிராம பிரசங்கத்துக்கு போய் கிராமங்களல் தங்கினாலும், இந்த ஜெப வழக்கத்தை ஒருபோதும் விடவில்லை. அவர்களிடம் வேலை செய்யும் சபை ஊழியரும், ஜெப ஜீவியத்தை உடையவர்களாக இருக்கவேணுமென்பது அவர்கள் வாஞ்சை. அவர்கள் உடன் ஊழியரைக் காணும்போது இன்று காலை வேதம் வாசித்து, ஜெபம் செய்தீர்களா என்ற கேள்வியை எப்போதும் கேட்பார்கள். சபை ஊழியர் அவர்களிடம் வரும்போதெல்லாம் மரியாதையாக, பேசி, அன்புடன் அவர்கள் கஷ்டங்களை கவனித்து அவர்களோடு ஜெபம் செய்து அனுப்புவார்கள் என சிலோனில் ஊழியம் பார்க்கும் கனம் சாமுவேல் ஐயரவர்கள் எழுதுகிறார்கள்.

சிறுவர் பாகம்

(கனம் தவமணி ஐயர், கீழக்கரை)

அற்பம் அற்பம் அன்று

அற்பமாய் எண்ணாதே!

1. சிறு பாவங்களை அற்பமாய் எண்ணாதே!
அவைகள் உன் ஆத்துமாவை கெடுத்துவிடும்.

2. சிறு கடமைகளை அற்பமாய் எண்ணாதே!
அவைகள் உன் ஜீவியத்தை மேன்மைப்படுத்தும்.

3. சிறு சோதனைகளை அற்பமாய் எண்ணாதே!
அவைமேல் வெற்றி உன் குணத்தைப் பலப்படுத்தும்.

4. சிறு துன்பங்களை அற்பமாய் எண்ணாதே!
அவைகள் உன்னை நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும்.

யூதருக்குள்ளே ஒரு பாரம்பரிய சரித்திரமுண்டு, அதென்னவென்றால் :—தாவீது தன் வாலிபத்தில், ஒருநாள் தேவனைப்பார்த்து "ஆண்டவரே! நீர் பைத்தியகாரரையும் கொசுக்களையும் சிலந்திப் பூச்சிகளையும் ஏன் சிருஷ்டித்தீர்? இவைகளால் பிரயோஜனமொன்றுமில்லையே" என்று சொன்னானாம். அதற்கு தேவன் தாவீதினிடத்தில் "உன் ஜீவியகாலத்தில் இவைகள் ஒவ்வொன்றும் உனக்கே பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கக் காண்பாய்" என்று சொன்னாராம். அப்படியே நடந்தேறினது.

முதலாவது :— ஆகீஸ் அரசனின் அரண்மனையில் தன் ஜீவன் தப்பும்படி தாவீது தன்னைப் பைத்தியகாரனைப்போல் பாசாங்கு பண்ண நேரிட்டது. அப்பொழுது பைத்தியகாரனின் பிரயோஜனமின்னதென்று கண்டுபிடித்தான்.

இரண்டாவது :—சவுல் ராஜாவின் ஈட்டியை அவன் தூங்கும் போது அவனுக்குத் தெரியாமல் எடுத்தபோது, அற்பக்கொசுவின் பிரயோஜனத்தைக் கண்டுபிடித்தான். அதெப்படியெனில், சவுலும் அவனுடைய படைவீரன் அப்னேரும் ஈட்டியைச் சுற்றி வளைவாய்ப் படுத்திருந்தார்கள். அவர்கள் தூங்கும்போது ஒரு கொசு அப்னேரைக் கடித்தபடியால் அவன் உருண்டுபடுத்தான். ஈட்டியை எடுக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்த தாவீது அப்பொழுது கிட்டப்போய் ஈட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

மூன்றாவது :—சீப் வனாந்தரத்தில் தாவீது சவுலுக்கு ஒளிந்து ஓடுகையில் சவுலின் சேவகர் அவனை நெருங்கிப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது தாவீது பயந்து பக்கத்திலிருந்த ஒரு குகைக்குள் போய் ஒளிந்தான். அவன் குகைக்குள் சென்றவுடனே குகையின் வாயில் ஒரு சிலந்தி வலையைப் பின்னினது. தாவீதைத் தொடர்ந்து வந்தவர்கள், குகையின் வாயில் வலையைக் கண்டவுடன் தாவீது குகைக்குள் போயிருக்கமாட்டான் என்று நினைத்து அதைக் கடந்து போய்விட்டார்கள். அப்போது சிலந்திப் பூச்சியின் பிரயோஜனத்தைக் கண்டறிந்தான்.

"இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" பரி. மத். 18:10

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், கீழக்கரை)

23-ம் சங்கீதம்

நோக்சம் :— *கர்த்தர் என் மேய்ப்பர் ; எனக்குக் குறைவு இல்லை.*

குறிப்புகள் :

1. *எனக்குக் கீழே — புல்லுள்ள இடம்* (வச. 2)
2. *என்னருகே — அமர்ந்த தண்ணீர்* (வச. 2)
3. *என்னோடு — ஆண்டவர்* (வச. 4)
4. *என்னைச் சூழ — சத்துருக்கள்* (வச. 5)
5. *எனக்கு முன்னே — விருந்து* (வச. 5)
6. *எனக்கு பின்னே — நன்மையும் கிருபையும்* (வச. 6)
7. *எனக்கு மேலே — கர்த்தருடைய வீடு* (வச. 6)

வேத வினாக்களுக்குரிய விடைகள்.

1. *லேவியராகமம்* 16 : 10, 21
2. *ஆமோஸ்* 1 : 1
3. *நெகேமியா* 13 : 15-22
4. *ஆதி.* 10 : 8-9
5. *யாத்.* 3 : 17, *உபா.* 8 : 7-10
6. *யோவான்* 21 : 1-13
7. *யோவான்* 3 : 16
8. *நீதிமொழி* 3 : 13-26
9. I *ராஜா* 4 : 33
10. *ஏசாயா* 61 : 1-2
11. *யாத்.* 7 : 10-12
12. *தானியேல்* 4 : 33

இயேசுவின் ஜெபப்பள்ளி

இருபத்தோராம் பாடம்

‘நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்’
அல்லது
எல்லாம் அடங்கிய நிபந்தனை.

‘நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்’ (யோவான் 15 : 7)

கடவுள் நம்மோடு கொள்ளும் சகல தொடர்பிலும் அவரது வாக்குத்தத்தமும் அதற்குரிய நிபந்தனைகளும் இணைபிரியாதவை. நாம் அவரது நிபந்தனைகளை நிறைவேற்றினால், அவர் தமது வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுகிறார். நாம் அவரோடு எப்படி இருக்க விரும்புகிறோமோ அதனைப்பொருத்தே அவரும் நம்மோடிருக்கிறார். ‘தேவனை நெருங்கிச்சேருங்கள். அப்பொழுது அவரும் உங்களை நெருங்கிச் சேருவார்.’ அப்படியே ஜெபத்திலும் ‘நீங்கள் கேட்டுக் கோள்வதெதுவோ’ என்ற எல்லையற்ற வாக்குத்தத்தத்திற்கு ‘நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்’ என்ற நிபந்தனையுமுண்டு. கிறிஸ்துவுக்கே பிதா எப்போதும் செவிகொடுக்கிறார். கிறிஸ்துவுக்குள் கடவுள் இருக்கிறார். கிறிஸ்துவுக்குள் இருப்பதன் மூலமே கடவுளை நாம் அடையமுடியும், நமது ஜெபம் கேட்கப்படவேண்டுமானல் கிறிஸ்துவுக்குள் நாம் நிலைத்திருக்கவேண்டும் அப்போதுதான் நாம் விரும்புவதெதையும் கேட்க உரிமையுண்டு, அவரது வாக்குத்தத்தமும் நிறைவேறும்.

இந்த வாக்குத்தத்தத்தை அநேக விசுவாசிகளின் ஜெப அனுபவத்தோடு நாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நாம் திடுக்கிடுகிறோம். ஏனெனில் பலரின் ஜெபங்களுக்குப் பதில் அருளப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? நாம் கடவுள் நிபந்தனையை நிறைவேற்றாது தவறியிருக்கவேண்டும் அல்லது கடவுள் தமது வாக்குததத்தத்தை நிறைவேற்ற மறுத்திருக்க வேண்டும. ஆனல் விசுவாசிகள் இவற்றுள் எதனையும ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. இந்தச் சிக்கலிலிருந்து தப்ப ஒரு மார்க்கம் கண்டுபிடித்திருக்கின்றனர். அதென்னவெனில், நமது ஆண்டவர் சொல்லியிராத ‘கடவுளுக்குச் சித்தமானல்’ என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்கின்றனர். இதன் மூலம், தாமும் கடவுளும் உண்மையுள்ளவர் என்று நிலைநாட்ட முயல்கின்றனர். ஆண்டவர் அருளிய வார்த்தைகளை அப்படியே நம்பிக்கடைப்பிடித்து ஜெபிப்பவர்கள் கடவுள் உண்மையுள்ளவர் என்பதைக் கண்டுகொள்வர். கிறிஸ்துவில் நிலைத்திராததே ஜெபத்திற்குப் பதில் பெருததற்குக் காரணம் என்றுணர்வர். அவ்

வாறு செய்யும்போது, பரிசுத்தாவியானவர் நமது பலவீனத்தையே மகாபலமான ஊக்கி (motive) ஆக்கி கிறிஸ்துவில் நம்மை நிலைக்கச் செய்து ஆசிசெய்வார்.

'நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்' கிறிஸ்தவன் ஒருவன் கர்த்தராகிய கிறிஸ்துவின் கிருபையிலும், அவரைப்பற்றி அறிகிற அறிவிலும் வளரும்போது, கடவுளுடைய திருவார்த்தைகள் வளர்வதையும், அவற்றிற்குப் புதிய பொருள்களும் ஆழ்ந்த கருத்துக்களும் காணப்படுவதையும் கண்டு வியப்படைவான். ஒருகாலத்தில் அவனுக்கு விளங்கினதாகத்தெரிந்த ஒரு வசனம் அவன் கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சியடைந்தவுடன் அதே வசனம் ஒரு பரம இரகசியமாக இருப்பதையறிவான். தெய்வீக நிறைவில் அவன் பரிசுத்தாவியால் நடத்தப்படும்வரை அது மறைபொருளாயிருக்கிறது என்னும் கருத்தில் வளர்ந்துகொண்டேயிருப்பதும் தெய்வீக வாழ்வின் நிறைவைப்படிப்படியாக வெளிப்படுத்துவதுமான நித்திய வார்த்தைகளுள் 'என்னில் நிலைத்திருங்கள்' என்பதும் ஒன்றும். செடியோடு கொடியிணைக்கப்படுவது ஓயாவளர்ச்சியையுடையதுபோல, கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பது ஒரு வாழ்க்கை முறை, அதில் தெய்வீக வாழ்வு நம்மை முற்றும் ஆதீனமாக்கிக் கொள்ளுகிறது. முதிர்ச்சியடையாத பலவீனமான விசுவாசியொருவன் அவன் அடைந்த வெளிச்சத்தின் அளவிற்குக் கிறிஸ்துவுக்குள் உண்மையாகவே நிலைத்திருக்கலாம். ஆயினும் ஆண்டவர் கொண்ட கருத்தின்படி, கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் உச்சநிலையை எவனொருவன் அடைகிறானோ, அவனே அவ்வார்த்தைகளோடு இணைக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களைச் சுதந்திரித்துக் கொள்ளுவான்.

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து வளரும் வாழ்க்கையின் முதல் பருவம் விசுவாசமாகும். ஒரு விசுவாசி எவ்வளவு பலவீனனாயிருந்தபோதிலும் அவனுக்கென்றே இப்பிரமாணம் அருளப்பட்டிருக்கிறது. அவன் அறிந்திருக்கிற அளவிற்குக் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதே அவனது பெரிய குறிக்கோளாயிருக்கவேண்டும். ஆகையால் தோல்விகளும் நன்றியில்லாமையுமிருந்தபோதிலும் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதே அவனது உடனடியான கடமை. அதுவே அவனுக்கு ஆசீர்வாதம். ஆண்டவரின் அன்பிலும், வல்லமையிலும் உண்மையிலும் அவன் சிறப்பாக உழைக்கவேண்டும. இப்படிச் செய்யும்போது விசுவாசிப்பதே அவனுக்குத்தேவை என்று அவன் உணர்வான்.

வெகு சீக்கிரத்தில் அவனுக்குத் தேவையானது இன்னும் ஒன்று உண்டு என்பதைக் காண்கிறான். கீழ்ப்படிதலும் விசுவாசமும் கைகோத்துச் செல்லவேண்டும். விசுவாசத்தோடு கீழ்ப்படிதல் கூட்டப்படவேண்டும் என்றர்த்தம் அன்று. கீழ்ப்படிதலிலேயே

விசுவாசம் வெளிப்படவேண்டும். ஆண்டவரை நோக்கின வண்ணமாக வீட்டில் கீழ்ப்படிதல் விசுவாசம்; கடவுள் சித்தத்தை நிறைவேற்ற வெளியே செல்லும் விசுவாசம் கீழ்ப்படிதல். கடமைகளிலும் அவற்றின் கனிகளிலும் கண்ணோக்கமாயிருப்பதைவிட கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதின் ஆசீர்வாதத்திலும், சிலாக்கியத்திலும் எவ்வளவு அதிகமாய்ப்பற்றுடையவனாயிருக்கிறான் என்பதை அவன் காண்கிறான் நடைமுறையில் கீழ்ப்படிந்து காட்டுவதன் மூலமே கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதை நிர்வகிக்க முடியும். 'நீங்கள் என் கற்பனைகளைக் காத்துக்கொள்வீர்களானால், நீங்கள் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்'. இப்பருவத்தில் அவனது சித்தத்தை ஆண்டவரின் சித்தத்தோடு ஐக்கியப்படுத்துவதும், அவனது இருதயத்தையும், அவனது முழு ஜீவியத்தையும் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் கொண்டுவருவதுமே அவனது முக்கிய முயற்சியாகும்.

என்றபோதிலும் இன்னும் ஏதோ குறைவாயிருக்கிறது. கிறிஸ்துவின் பக்கத்தில் விசுவாசியின் சித்தமும் இருதயமும் இருக்கின்றன; அவன் கீழ்ப்படிந்து தன் ஆண்டவரை நேசிக்கிறான். ஆயினும், அவனது மாம்ச சுபாவம் இன்னும் ஏன் அவ்வளவு வல்லமையுடையதாயிருக்கிறது? அவனது இயல்பான மனவெழுச்சிகள் அவை இருக்கவேண்டிய விதமாக ஏன் இருக்கவில்லை? செய்யத்தகாதவற்றைச் செய்வதும், செய்யத்தக்கவற்றைச் செய்யாததும் ஏன் இன்னும் குடிகொண்டுள? நிலைத்திருத்தல் என்பதில் கிறிஸ்து கொண்ட கருத்தின்படி பரிசுத்தத்தின் அழகும், அன்பின் வைராக்கியமும் குறைவாயிருப்பதேன்? கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவின் மரணத்திற்கும் இசைய சுயநலம், இன்னும் சாகாமலிருப்பதேன்? கிறிஸ்துவுக்குள் நாம் நிலைத்திருப்பதிலும், கிறிஸ்து நம்மில் நிலைத்திருப்பதிலும் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. அந்த அனுபவம் சிலருக்குக் கிடையாது இதனாலேயே மேலே சுட்டிக்காட்டிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஆசீர்வாதத்திற்கு நடத்துபவை விசுவாசமும கீழ்ப்படிதலுமே. விசுவாசமும், கீழ்ப்படிதலும் தருகிற பூரண ஆசீர்வாதம் இன்னதென்பதை, நமது ஆண்டவர் திராட்சச்செடியின் உவமையைக் கூறினபோது வெகு திட்டவட்டமாய்க் கூறினார். 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' (யோவான் 14:15) என்று மும்முறைக்குமேல் கூறினார். அப்படிப்பட்ட கீழ்ப்படியும் அன்பினை மூன்றுவித ஆசீர்வாதங்களால் முடி சூட்டுவதாகவும் கூறினார். அவையாவன:—

(1) 'பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன வருவார்' (யோவான் 15:26)

(2) குமாரன் தம்மை வெளிப்படுத்துவார்.

(3) *பிதாவும் குமாரனும் வந்து அடியாருள்ளத்தில் வாசம் பண்ணுவர்.*

நமது விசுவாசம கீழ்ப்படிதலில் வளரும்போதும், கீழ்ப்படிதலிலும் அன்பிலும் நமது ஜீவனும் புறப்பட்டுக் கிறிஸ்துவைத் தழுவிக் கொள்ளும்போதும், நமது அந்தரங்க ஜீவியம் திறக்கப்படுகிறது. ஜீவனையும், பரிசுத்தாவியையும், மகிமைப்பட்ட இயேசுகிறிஸ்துவையும் பெறுகிறது. கிறிஸ்துவுக்குள்ளும் பிதாவுக்குள்ளும் ஐக்கியப்படுகிறது. 'நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும, நான் உங்களிலும் இருக்கிறதை, அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்' (யோவான் 14 : 20) என்ற வார்த்தையும் நிறைவேறும். கிறிஸ்து கடவுளிலும், கடவுள் கிறிஸ்துவிலும, சித்தத்திலும் அன்பிலுமட்டுமல்லாது, இயல்பிலும், ஜீவனிலும ஒருவரிலொருவர் ஒன்றாயிருப்பதால், நாமும் கிறிஸ்துவிலும், கிறஸ்து நம்மிலும், சித்தம அன்பு ஆகியவற்றுள் மட்டுமல்லாது இயல்பிலும் ஜீவனிலும் கூட நாம் ஐக்கியப்படுகிறோம்.

அவா பிதாவிலும், நாம் அவரிலும், அவர் நம்மிலும் இருப்பதை ஆண்டவர் அறிந்தே, "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நான் உங்களில் நிலைத்திருப்பேன். இவ்வாக்குத்தத்தத்தையும் அதன் நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டு, என்னோடு ஐக்கியப்படும் தெய்வீக வாழ்வைப்பெற்றுக்கொள்ளச் சம்மதியுங்கள். நீங்கள் அப்படிச்செய்தால், அதாவது நான் பிதாவில் நிலைத்திருப்பதுபோல, உங்கள் வாழ்வு என்னுடையதாகவும், என் வாழ்வு உங்களுடையதாகவும் இருக்கத்தக்கதாக நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நான் உங்களில் நிலைத்திருப்பேன்" என்று சொன்னார்.

இதுவே உண்மையாக நிலைத்திருப்பதாகும். அப்போதுதான் கிறிஸ்து வந்து நம்மில் வாசம்பண்ணுவார். நான் இனிமேல் ஒன்றும் இல்லை. கிறஸ்துவே என்னில் குடிகொண்டு என் வாழ்வாயிருக்கிறார் என்று சொல்லும் அளவிற்கு நிலைத்திருக்கவேண்டும். சகல நன்மையும் செய்கிற அன்பிற்குக் கீழ்ப்படிந்து, அதனை நமபியிருப்பதிலே மகிழ்ச்சிகொள்ளுகிற, கவலையற்ற, சிறு பிள்ளை போலாவதே அந்நிலை.

இப்படி நிலைத்திருப்பவருக்கு ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தம் உரிமைப் பொருள் ஆகிறது கேட்பதெல்லாம் கிடைக்கிறது. கிறிஸ்துவே அப்படிப்பட்டவர்களை ஆளுகிறார். அவர்கள் அன்பிலும், அவர்கள் சித்தத்திலும், அவர்கள் வாழ்விலும் கிறிஸ்துவே வாசம் பண்ணுகிறார். அவர்கள் சித்தத்திற்குள் கிறிஸ்து பிரவேசிக்கிறார், வாசமபண்ணுகிறார், தமது சுவாசத்தை ஊதுகிறார். எவருடைய ஜெபத்திற்குப் பிதா எப்போதும் செவிகொடுக்கிறாரோ அவரே அவர்களுக்குள் ஜெபிக்கிறார். அவர்கள் அவருக்குள் ஜெபிக்கிறார்கள். அவர்கள் கேட்பதெதுவோ அது அவர்களுக்கு அருளப்படும்.

அன்புமிக்க உடன் விசுவாசியே! கிறிஸ்து விரும்புகிறபடி அவருக்குள் நிலைத்திராதபடியினாலேயே, அவிசுவாசம், அஞ்ஞானம் உலகப்பற்று ஆகியவற்றின் மத்தியில் திருச்சபையானது பலங் குன்றி இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் திருச்சபை நிலைத்திருந்தால் அதனை அவர் வெற்றிபெறச் செய்ய வல்லவராயிருக்கிறார். அவர் வாக்குத்தத்தம் உண்மையானது. திராட்சச் செடியில் நிலைத்திருப்பது ஓயாமல் வளரும் வாழ்வாகும். அதனை நமக்குத்தர அவர் உயிருடன் இருப்பதால் அதனை நாம் அடைவது எளிது

'நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி, ஆசையாய்த் தொடருகிறேன்' (பிலிப்பு 3 : 12) என்று நாமும் பவுல் கூறுவது போல் கூறுவோமாக.

நாம் கேட்கிற வரத்தைப்பார்க்கிலும், கடவுளோடு ஜெபத்தில் ஐக்கியப்படுவதையே பெரிதும மதிக்கவேண்டும். நமக்கு எது சிறந்தது என்று கடவுளுக்குத்தான் தெரியும். நாம் கேட்டதைக் கொடாதிருந்தாலும் அதிலும் சிறந்தது ஒன்றை நமக்கருளச் சித்தமாயிருக்கலாம். ஜெபமானது முடிவுக்கு ஒரு கருவியேயன்றி முடிவன்று, நாமும் நமது ஜெபமும் கடவுளால் ஒப்புக்கொள்ளப்படுகிறோம் என்று காட்டும் ரூபகாரம் ஜெபத்திற்குக் கிடைக்கும் விடையேயாம் பரமபிதாவோடுகொள்ளும் ஐக்கியமும் அவரது தயவுமே நாம் கேட்பவற்றிலும் சிறந்த மதிப்புடையவை. நமது ஆன்மீக முதிர்ச்சிக்கும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம் என்பதற்கும், கடவுள் சித்தத்தோடு நமது சித்தம் ஒன்றுபட்டிருக்கிறது என்பதற்கும், கடவுள் நமக்காக ஆயத்தம் செய்திருப்பதைக் காணவும், பெறவும், தக்க அளவிற்கு நமது விசுவாசம் பலப்பட்டிருக்கிறது என்பதற்கும் கிறிஸ்துவின் திரு நாமமும் அவரது இயல்பும் நம்மை ஆதீனமாக்கிக் கொண்டன என்பதற்கும், கடவுள் உலகை ஆள்வதற்கு ஆலோசனை கேட்கும் கூட்டத்தாருள் நாமும் உறுப்பினர் என்பதற்கும், நாம் தினசரி ஜெபத்திற்குப் பெறும் விடையே ரூபகாரமாகும். "அந்த நாளிலே: மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்—நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா 16 : 23-24) உண்மையாக ஆத்மீகமாகக் கிறிஸ்துவில் ஐக்கியப்பட்ட ஜெபத்திற்கு எப்போதும் விடை கிடைக்கும்.

இளைஞர் ஏடு

வாலிபரால் எந்த நாடும்—இந்த
மாநிலத்தில் என்றும் மாண்புறக்கூடும்—என்ற
சீலமிகும் உயர் சிந்தையினோடும்—இங்கு
நீட்டினோம் இளைஞர்க்காய் இச்சிறு ஏடும்.

உங்கள் வினக்களுக்கு விடைகள்

திரு வீ. ஜெயராஜ், B.A., L.Th., கிறிஸ்தவ இலக்கியத் • தனி அலுவலாளர்.

1. *பயனற்ற, அபாயகரமான உயிரினங்களைக் கடவுள் ஏன் படைத்தார் ?*

மனித நிலையில் நோக்கினால் இவ்வினா சரிதான். ஆனால் பரிணாமக் கண்ணோடு (eye of evolution) நோக்கினால் இவ்வினா தவறு. பரிணாமத்தில் பொது விதிகளும் உண்டு. சிறப்பு விதிகளும் உண்டு. சிறப்பு விதிகளை மட்டும் நோக்கும்போதுதான் இயற்கை உலகில் இசைவின்மை இருப்பதாகத் தோன்றுகிறது மனித உடலைப்பற்றியும், சில உயிரியல் விதிகளைப்பற்றியும் (Laws of Biology) நமக்குத் தெரியும்—உடலை உருவாக்கும் வெவ்வேறு உயிரணுக்களையும் அறிவோம். ஆனால் மூல உயிரணுக்களிலிருந்து அவ்வுயிரணுக்கள் எவ்வாறு வேறுபட்டவை என்று அறியோம். அவற்றிற்குரிய தனிச் சிறப்பியல்புகள் எவ்விதம் உண்டாகின்றன என்றும் தெரியோம். விருத்திக்குரிய விதிகளும், (laws of development) ஒன்றுபடுத்தும் விதிகளும் (coordinating laws) நமக்கு இன்னும் புலப்படவில்லை இசைவின்மைக்கு இயற்கை காரணம் அன்று. நம் அறியாமையே காரணம். மனிதன் விஞ்ஞான மூலம் அறிந்ததைவிட அறியாதன பல உண்டு. இவ்விதம் அறியாத பலவற்றின் காரணத்தாலேயே நாம் இயற்கையைத் தவறாக அர்த்தம் செய்கிறோம். நிலைமைகள் சாதகமாயிருக்கும் வரை சிறப்பு விதிகளுக்கு வலிமை உண்டு. பொருத்தமுறுதல் (adaptation) என்பது பரிணாமத்தில் ஒரு சிறப்பு விதி. ஆனால் இவ்விதி பரிணாமத்திற்கு விரோதமாகவும் கிரியை செய்கிறது. ஆயினும் அது பரிணாமத்தின் பொது விதியை அழிக்க முடியாது இயற்கைத் தேர்தல் (Natural Selection) என்பது பிறிதொரு சிறப்பு விதி பொருத்தமுறுதல் என்ற சிறப்பு விதி தன் முன்னைய முயற்சிகளைப் பலவீனப்படுத்துகிறது இயற்கைத் தேர்தல் என்ற சிறப்புவிதி இது காறும் காப்பாற்றினவற்றை அழிக்கிறது. ஒரு உயிருக்கு ஒரு சூழ்நிலையில் சாதகமாயிருந்த ஓர் உறுப்பு, பிறசூழ்நிலையில் பாதகமாகவுமிருந்திருக்கிறது. பொருத்தமுறுதல், இயற்கைத் தேர்தல்

என்ற சிறப்பு விதிகளால் புதிய சூழ்நிலையில் அது அழிவுறுகின்றது. உதாரணமாக வட சைபீரியாவில் ரெயின்டீர்களுக்கு மிக நீண்ட கொம்புகள் இருந்தன பனியுசத்தின்போது (Glacial period) ரெயின்டீர்கள் காடுகளடர்ந்த தென்சைபீரியாவிற்குத் துரத்தப் பிரதேசத்திலிருந்து துரத்தப்பட்டன இக் காட்டுப் பிரதேசத்தில் அவற்றின் நீண்ட கொம்புகளே அவற்றிற்கு எமனாக மாறின. ரெயின்டீர் இனமே இல்லாமற் போயிற்று

இயற்கையில் சமநிலை ஏற்படுத்துவதும் உலகம் அழியாதிருக்கச் செய்வதுமே கடவுள் படைப்பின் நோக்கம். பூச்சி புழுக்கள் அளவுக்கு மிஞ்சிப் பலுகிப் பெருகி உலகை யழிப்பதைத் தடுக்கு மாறு கடவுள் புள்ளினங்களைப் படைத்தார். பூச்சி புழுக்களின் வர்க்க விருத்தி கங்கு கரையற்றது. ஒரே சமயத்தில் உருளைக் கிழங்கு மூட்டைப்பூச்சி (Potato bug) 6 கோடி மூட்டைப்பூச்சி களை உண்டுபண்ணும். தாவரப்பேன் (Plant louse) ஒரு பருவதத் திற்குள் 13 தலைமுறைகளை அல்லது 6 கோடிப் பேன்களைப் பொரிக் கும. இவை தடுக்கப்படாவிடில் உலகம் மூட்டைப்பூச்சியாலும் பேனாலும் நிறைந்திருக்கும். அமெரிக்காவில் சால்ட்லேக் நகரில் மார்மன்ஸ் (Mormons) என்பவன் காடுவெட்டிக் குடியேற வந்த போது சில வண்டுகள் படையெடுத்து வந்து அவனைத் தாக்க ஆரம் பித்தன. நல்ல வேளையாகக் கடற் பறவைகள் வந்து அச்சில் வண்டுகளையெல்லாம் தின்றதால் அவன் தப்பினன். இல்லாவிடில் இன்று சால்ட்லேக் நகரம் தோன்றியிராது. இந்தப் பேருதவியை நினைத்து ஒரு நினைவுச் சின்னம் அங்கு கட்டிவைத்துளார். புள் ளினம் விவசாயிகளின் நண்பன்.

பறவை தன் உடலின் எடையில் பாதியளவிற்கு ஒரே நாளில் பூச்சி புழுக்களைத் தின்கின்றது. பயிரையழிக்கும் களைகளின் விதை களைத் தின்று பயிரைக்காக்கும். 'புள்ளின மில்லாவிடில் விவசாயம் உருப்படாது. தாவர உலகும் அழியும்' என்று அமெரிக்க நாட்டு உயிர்நூல் நிபுணர் H. W. ஹென்ஷா கூறுகிறார். பூச்சிகளுக்கு நுரையீரல் கிடையாது குழாய்கள் வழியாகவே மூச்சு ஏற்படும். பூச்சிகள் பெரிதாயினும் மூச்சுக் குழாய்கள் பெரிதாகா. இவ்வித மாகப் பூச்சிக் கொடுமையைக் கடவுள் தடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் முதன்முதலாகக் குடியேறப்போன ஐரோப்பியன் ஒருவன், ஒரு கற்றாழையையும் (cactus) கொண்டு போய் தன் கொல்லையில் வேலியாக நட்டான். அக்கற்றாழையை அதிகம் பெருகாது தடுக்கும் எதிரி ஆஸ்திரேலியாவில் இல்லாம லிருந்தமையால், ஒரு நூற்றாண்டுக்குள் கற்றாழை பெருகி விவசாயத் திற்கே இடமில்லாமற் செய்துவிட்டது. ஆஸ்திரேலியா சர்க்காரின் பட்ஜட்டில் கற்றாழை நீக்கத்திற்கென்று கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டுதோறும் ஒதுக்கி வந்தனர். இராணுவம், மக்கள்

நலம், கல்வி முதலிய திட்டங்களுக்குச் செலவாகும் தொகையிலும் இந்தச் சாத்மீக, அமைதியான எதிரியை எதிர்ப்பதே பெரும் வேலை யாகிவிட்டது. இறுதியில் பல விஞ்ஞானிகள் பல்லாண்டுகள் ஆராய்ச்சி செய்து இதற்கு விரோதியான பூச்சி ஒன்று இயற்கை யிலிருப்பதைக் கண்டு பிடித்தனர். ஆஸ்திரேலியா புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட கண்டமாகையாலும், இதர கண்டங்களோடு தொடர் பற்றுப்போனமையாலும் அப்பூச்சிக்கு அங்கு எதிரியில்லாதிருந் தது. இப் பூச்சியை அங்கு கொண்டுபோய் விட்ட ஓராண்டுக்குள் கற்றாழையே அற்றுப்போயிற்று அப் பூச்சி இந்தியாவிலும் தன் வேலையைச் செய்து கற்றாழையை அறவே ஒழித்தது.

உலகிலேயே பெருத்த நாசம் விளைவிக்கும் பிராணி எலியாகும். சில ஆண்டுகளில் பல கோடிகளாகப் பெருகும். ஆண்டொன்று அமெரிக்க விவசாயிகளுக்கு எலிகளால் ஏற்படும் சேதம் 800000000 ரூபாய் என்று கணித்துளர். இந்தச் சுண்டெலிகளைக் கட்டுப்படுத்தப் பாம்பு, ஆந்தை, வல்லூறு, பருந்து, கழுகு, காகம் முதலியவை உதவுகின்றன. பாம்பு பெருத்துப்போகாமல் தடுக்கக் கீறிகள் இருக்கின்றன. தேனீக்கள் இல்லாவிடில் தானியங்கள், காய்கனிகள் விளையா. நிலப்புழுக்கள் நிலத்தை உழுகின்றன.

ஜியார்ஜியாவில் விவசாயிகள் காடைகளை வளர்க்கின்றனர். ஒரு காலத்தில் பயிரினத்தை காக்கும் காடைகளை அழிப்பது வல்லூறு, பருந்து, இராஜாளி என்று நினைத்து அவற்றைச் சுட்டு வீழ்த்தினர். ஆனல் அவற்றின் வயிற்றைக் கிழித்துச் சோதித்ததில், அவை காடைகளையல்ல சுண்டெலிகளையே அதிகமாக உண்டிருப்பதைக் கண்டனர். அதுமுதல் அவை பயிரை அழிக்கும் சுண்டெலியின் எதிரிகள் என்றும், சுண்டெலிகளே காடை முட்டைகளை அழிப்ப வை என்றும் கண்டனர். அதுமுதல் அப்பறவைகள் காடையின் எதிரிகளல்ல. சுண்டெலியின் எதிரிகள் என்றறிந்தனர்.

புலி சிங்கம் யானை கரடி போன்ற காட்டு மிருகங்களே காட் டைக் காக்கும் "போலீஸ்காரர்." காடு மழைக்காதாரம். மழை காட் டுக்காதாரம். காடில்லாவிடில் மழையிராது. மழையிராவிடில் பஞ்சம் பட்டினி மிகும். பழங்கால இந்தியாவின் செழிப்புக்குக் காரணம் காடுகள் அழிக்கப்படாமலிருந்ததே. இன்றைய வறுமைக்குக் காரணம் காட்டின் அழிவேயாம். சகாரா ஒரு காலத்தில் பெருங் காடடர்ந்த பிரதேசமாயிருந்ததென்றும், அங்கு காட்டெருமைகள் உலாவின என்றும் எகிப்தியப் பழங்கால வரலாறு தெரிவிக்கின்றது. நம்மைக் கொல்லுமாறு நமது இரத்தத்தில் வரும் விஷக் கிருமிகள் மிகாதபடி தடுக்க, நமது இரத்தத்தில் வெள்ளைக் கிருமிகளும் உள. அவை அக்கிருமிகளை விழுங்கிவிட்டுச் செத்துப்போகின்றன என்

பது மருத்துவக் கலை கூறும் உண்மை. கொசு, ஈ முதலியன காற்றாலும், புயலாலும், மழையாலும் கட்டுப்படுததப்படுகின்றன. எறும்பின மிகாதபடி கோழிக்குஞ்சுகள் கட்டுப்படுத்துகின்றன. ஆர்க்டிக் பிரதேசத்தில் மக்கள் அதிகம் வாழமுடியாது. அங்குதான் கொசு அதிகம். ஜெற்ஸி ஈ வெப்ப மண்டலத்தில்தான் அதிகம். காலரா, அம்மை, பிளேக், காசம், டைபாய்டு, குட்டம் முதலிய நோய்களைக்கொண்டுவரும் கிருமிகள் தம் இஷ்டம்போல் பலுகிப் பெருகினல் நமது நிலை என்னவாகும்?

கடவுள் படைத்துள்ள இயற்கை ஒழுங்கை மனிதன் கலைக்கும்போது, அக்குற்றத்திற்குரிய தண்டனையும் அடைகிருன். முன் காலத்தில் மக்கட் பெருக்கமிகாத காலத்தில் சிற்ரேடைகளிலும் பேரருவிகளிலும், ஆறுகளிலும் தெள்ளிய நீரோடினது. அதனுல் நீர்ப்பூண்டுகள், மற்ற உயிரினம் பெருகின. அவற்ருல் இரைகள் காக்கப்பட்டன. நீர்நாய், எகினமபோன்ற நீர்வாழும பிராணிகள் அருவிகளின் குறுக்கே அணைகள் கோலி நீரின் வேகத்தை மட்டுப் படுத்தின. நீர் தேங்கினமையால் தாவரங்கள் செழித்தன. விலங்கினம் வாழ்ந்தன. காடுகள் அடர்ந்தன. மனிதன் மலைச்சரிவுகளில், மலை உச்சிகளில் நின்ற மரங்களை அழித்தபின்னரே, மழைநீர் நிலத்தின் வளமானமேல் மண்ணை அரித்தது நீர் அசுத்தமானது. நீரால் நிலத்திலிருந்து கொண்டுபோய் கடலில் சேர்க்கப்படும் வளச்சத்தின் மதிப்பு, பயிரிடும் வளச்சத்தினைப் பார்க்கிலும் 20 மடங்கு அதிகம் என்று அறிஞர் கணித்துளர். பின் ஏனையா பஞ்சம் வராது நாட்டில்? கடவுள் நல்ல உலகைத்தான் மனிதனுக்குத் தந்திருக்கின்ருர். மனிதன் அதனைப் பங்கப்படுத்திப் பஞ்சத்தை, கொள்ளைநோயைத் தானே வருவித்துக்கொள்ளுகிருன்.

இக்காலத்தைவிட அக்காலத்தில் பிற உயிரை உண்டுவாழும் ஓநாய், புலி, கரடி, சிங்கம், பருந்து போன்றவை அதிகமிருந்தன. இவை இப்படி இருந்தபோதிலும், தாவரபக்ஷிணிகள், பாடும் பறவைகள் போன்ற தொந்தரவு செய்யாத உயிரினங்கள் செழித்து வாழ்ந்தன. இயற்கை ஒழுங்கில் எந்த உயிரினமும் பிற உயிரினத்தை அழித்துவிடவில்லை அல்லது அளவுக்குமிஞ்சிக் குறைததுவிடவில்லை என்பது இயற்கை தரும் சான்று. பலவீனமான, வியாதிப்பட்ட, உயிர்களையே அதிகம் அழிக்கின்றன. மேலும் பிற உயிர்களுக்கு எதிரிகளானவற்றையும் அவை உணவாய்க்கொள்கின்றன.

மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள பிரிட்டிஷ் ஜமாய்க்காத் தீவார் கீறிகளை வளர்க்க ஆரம்பித்தனர். அவை பலுகிப் பெருகின. சில்லாண்டுகளில் பாம்புகளைமட்டுமல்லாமல், கோழி யுலகையும, புள்ளுலகையும் ஒழியச் செய்தன. கோழிகளும், புள்ளினங்களும்

ஒழிந்ததன் விளைவாக, பூச்சியுலகு அதிகரித்தது. 1902ல் சீறிபை எவரும் நாட்டிற்குள் கொண்டுவரவுங்கூடாது. வளர்க்கவும் கூடாது என்று சட்டம் இயற்றினர்.

பூமியிலிருந்து நிலவுக்கும், நிலவிலிருந்து பூமிக்கும், ஆகர்ஷண சக்தி செல்கிறது. நிலவின் கவர்ச்சியால் கடலில் தினசரி இரு முறை ஏற்றவற்றங்கள் ஏற்படுகின்றன. சூரியவெப்பம் காற்றைச் சுழன்றுகொண்டேயிருக்கச் செய்கிறது. கடல்நீர் கெடை நீராகாத படி நிலவு காக்கிறது அதுவே உலகின் ஒப்பற்ற ஹெல்த் ஆபீஸர். நதிகள் கொணர்ந்த கடற்கரை அசுத்தங்களை அலைகள் சுத்திசெய்கின்றன. அப்படியிராவிடில் உலகமே கொள்ளை நோய் களின் உற்பத்திசாலையாகும். ஏற்றவற்றங்கள் புதிய நகரங்களைத் தோன்றச்செய்துள. நூற்றுண்டுகட்குமுன் ஏற்றத்தின் நீருயர்வை யும், வற்றத்தின் நதிவேகத்தையும், லண்டன் வாசிகட்கு நீர் கொண்டுபோகும்படி, சக்கரங்களைச் சுழலச்செய்யப் பயன்படுத்தி னர். இவ்விதமாக ஏற்றவற்றத்தை எத்தனையோ வகையில் பயன் படுத்த இடம் உண்டு.

மேலும் மனிதருக்கும் நோய், மரணம், விபத்து நேராவிடில் இந்த உலகம் மனிதரைத் தாங்கமுடியுமா? **மால்தூஸியன்** ஜனத் தொகை விதி தவறு. கடவுள் படைப்பிலே எவ்வுயிரும் அளவிற்கு மிஞ்சி உலகிலிருக்க முடியாது. பயாமீட்ரியின் (Biometry) அடிப் படையில் **ரெய்மண்ட்பேர்ல்** என்பவர் அமெரிக்காவின் ஜனத் தொகை 1930ல் 122 மில்லியன் என்றும், 1940ல் 136 மில்லியன் என்றும், சரியாகக் கணித்தார். அவர் விதிப்படி 2120ம் ஆண்டில் 191 மில்லியன் இருப்பர் என்றும் அதன் பின் அமெரிக்க நாட்டு ஜனத்தொகை உயராதென்றும் தெரிவித்துள்ளார். எனவே கடவுள் எல்லாவற்றையும் ஒழுங்காகவே ஞானமாகவே படைத்துளர் என்றறிக.

வேத வினாக்கள்

(கனம் செல்வம் டேயிலர் அம்மாள், வேதப்பாடசாலை)

1. போக்கு ஆடு என்றால் என்ன?
2. ஆமோஸ் தீர்க்கதரிசியின் ஊர் எது?
3. ஓய்வு நாளைப்பற்றி வைராக்கியமுள்ள பழைய ஏற்பாட்டுத் தலைவன் யார்?
4. கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன் யார்?
5. காஞனின் செழிப்பைப்பற்றி வேதம் கூறுவதென்ன?

6. கிறிஸ்து சீஷர்களுக்காக எப்பொழுது ஜெபித்தார்?

7. வேதாகமத்தின் விசேஷித்த வசனம் எது?

8. ஞானத்தைப்பற்றி வேதாகமத்தில் விபரமாக எங்கே வாசிக்கிறோம்?

9. எந்த எபிரேய அரசன் தாவர, கால் நடை, ஊர்வன சாஸ்திரத்தில் பாண்டித்தியம் அடைந்திருந்தான்?

10. நாசரேத் ஊர் ஜெப ஆலயத்தில் இயேசு எந்த தீர்க்கதரிசனத்தை உபயோகித்தார்?

11. யாருடைய கோல், மற்ற கோல்களை விழுங்கினதாக வேதத்தில் வாசிக்கிறோம்?

12. எந்த பெரிய அரசன் மாட்டைப்போல் புல்லை மேய்ந்தான்?

(விடைகளுக்கு மற்றொருபக்கம் பார்க்க—ப-ர்).

ஜுலை, 1955 கி.மு. சங்கப் பொருட்கள்

எதிர்கால நோக்கு (2) தனி நபராக.

ஜுலை 1. அவர் சொந்த சகோதரன் யோ. 1 : 35-42
2. உன் சிநேகிதர்கள் மாற்கு 5 : 1-20
3. எதிர்கால நோக்கு (2) தனி நபராக அப். 13 : 1-13.
தற்பிரதிஷ்டை என் ஜீவன் (6) என் வெள்ளியும், பொன்னும்.

ஜுலை 4. நன்றியறிதலோடு யாக். 1 : 5-10, 2 : 15-18.
5. மனச்சாட்சிக்குட்பட்டு அப். 5 : 1-11
6. ஒழுங்கிற்குட்பட்டு மல். 3 : 8-12
7. மனப்பூர்வமாய் லேவி. 22 : 17-25
8. பலியாக 2 சாமு. 24 : 18-25
9. உற்சாகத்தோடு 2 கொரி. 9 : 1-15
10. தற்பிரதிஷ்டை "எந்தன் ஜீவன், வெள்ளி, பொன் சொந்தமாக ஆளுமே" 1 நாளா. 29 : 1-5
ஓரே மெய்யான ஜீவிய பிரமாணம் (5) பெற்றோரை கனம் பண்ணுதல்

ஜுலை 11. பெற்றோரை அவமதிப்போருக்கு தண்டனை
யாத். 21 : 15-17

12 பேரரசன் தாயை கனம் பண்ணுகிறான்
1 ராஜா 2 : 13-20

13. ஞானவானுன ஆலோசகரின் ஆலோசனை
தீத். 1 : 7-9

14. இயேசுவின் முன்மாதிரி லூக். 2 : 41-52

15. இயேசுவின் ஆலோசனை மத். 15 : 1-9

16. ஆதித்திருச்சபைக்கு பவுலின் புத்திமதி
எபே. 6 : 1-18

17. ஒரேமெய்யான ஜீவிய பிரமாணம் (5) பெற்றோரை கனம்பண்ணுதல் யாத். 20 : 12 எபே 6 : 1-4

ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம் (6) ஜீவனின் புனித தன்மை.

ஜுலை 18. சதிமோசம் செய்து கொலை யாத். 21 : 12-16

19. பொறுமையால் கொலை ஆதி. 4 : 8-16

20. ஜீவனே முக்கியமானது எண். 35 : 15-34

21. அன்பின் பிரமாணம் ரோ. 13 : 8-10

22. சுவிசேஷத்தின் சுயாதீனம் கலா. 5 : 19-25

23. கட்டளையின் முடிவு 1 தீமோ. 1 : 5-17

24. ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம் (6) ஜீவனின் புனித தன்மை யாத். 10, 13, மத். 5 : 21-26

எதிர்கால நோக்கு (3) பிரபல்யத்தால்

25. கற்பலகை யாத். 20 : 1-18

26. நியாயப்பிரமாணம் திரும்ப கண்டுபிடிக்கப்பட்டது
2 ராஜா 22 : 8-13

27. வனாந்திரத்தில் கூப்பிடும் சப்தம் ஏசா. 40 : 1-8

ஜுலை 28. "புறப்பட்டுப்போய் போதி" மத். 28 : 16-20

29. வேதத்தை ஆராய்தல் அப். 17 : 10-14

30. எல்லைக் கப்பாற்பட்ட இடங்கள் 2 கொரி. 10 : 7-18

31. எதிர்கால நோக்கு (3) பிரபல்யத்தில்
2 தீமோ. 4 : 1-8

மதிப்புரை

"இரவு ஜெபம்"

திருநெல்வேலி அத்தியட்சர் இயற்றிய "இரவு ஜெபம்" என்ற நூல் 16 பக்கங்கள் கொண்டது. பல ஜெபங்களும் பாடல்களும் அடங்கியுள்ளது. தனி, குடும்ப, ஆலய ஆராதனைகளில் உபயோகிக்கத்தகுந்தது. விலை அணா $1\frac{3}{4}$. கிடைக்குமிடம் பாளையங்கோட்டை அத்தியட்சாதீன டிப்போ.

PUBLIC LIBRARY
16 AUG 1956
MADRAS

விளம்பரம்

மதுரை ராமனாதபுரம் அத்தியட்சாதீன தேவ ஊழியரின்

வருடாந்திரப் பரீட்சை 1955

வழக்கம்போல் இது ஆகஸ்டு மாதம் முதல் புதன்கிழமை (3-ம் தேதி) நடைபெறும் அன்று காலையில் " பாவமும் இரட்சிப்பும் " என்ற பாடத்திலும் மாலையில் " I, II தீமோத்தேயு ", " அவரில் இருந்த வெளிச்சம் " என்ற பாடங்களிலும் பரீட்சை நடக்கும். தேவ ஊழியர் ஆனைவரும் இதற்காக ஏற்கனவே ஆயத்தப்பட்டு வரும்படி அன்புடன் கேட்கப்படுகிறார்கள்.

வேதப்பாடசாலை,
பசுமலை.

Lenox Press, Pasumalai. 1—7—1955. 489 C.